بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 12.09.14 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 12 September 2014 (Tamil)**

## அல்லாஹ்வின் ஆதரவுகள், வழிகாட்டல்கள் ஆகியவற்றிற்கான ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

சென்ற சில நாட்களுக்கு முன் அமெரிக்காவிலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. மாநாட்டின்போது தாங்கள் தங்களின் சொற்பொழிவில் மக்கள் எவ்வாறு அஹ்மதிய்யத்தில் இணைந்து கொண்டிருக்கிறார்கள்; தப்லீகின் மூலமாகவும், அல்லாஹ்வின் மூலமாக நேரடியாகவும் மக்களின் கவனம் அஹ்மதிய்யத்தின் பக்கம் திரும்பிக் கொண்டிருக்கிறது. மக்கள் அந்த ஈமானில் உறுதியாக நிலைபெற்றிக் கொண்டிருக்கிறார்கள். அஹ்மதிய்யத்தின் உண்மை அவர்களின் உள்ளங்களில் நுழைந்து கொண்டிருக்கிறது ஆகியவற்றைப் பற்றிய சம்பவங்களை எடுத்துக் கூறிக் கொண்டிருந்தீர்கள். (கடிதம் எழுதிய) அவர் கூறுகிறார்: அப்போது என் உள்ளத்திலும் அந்தோ! என் மூலமாகவும் உலகின் இப்பகுதியில் யாராவது அஹ்மதிய்யத்தில் இணைந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! நானும் இந்த மாதிரியான அடையாளத்தைப் பார்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!! என்ற ஆசை தோன்றியது. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு என் தொலைபேசி மணி ஒலித்தது. தொலைபேசியில் ஒரு பெண்மணி, நான் இணைய தளத்திலிருந்து உங்கள் தொலைபேசி எண்ணைப் பார்த்தேன். அதனால் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன் என்றார். மேலும் எனக்கு இஸ்லாத்தில் அதிக ஆர்வம் உள்ளது. நான் உங்களை சந்திக்க விரும்புகிறேன் என்றும் கூறினார். (கடிதம் எழுபவர் கூறுகிறார்) அப்போது நான், சரி; வாருங்கள் என்றேன். நீண்ட தூரம் பயணம் செய்து அந்தப் பெண்மணி அவரிடம் சென்றார். தனக்கு எவ்வாறு இஸ்லாத்தில் ஆர்வம் ஏற்பட்டது என்பதையும், இணைய தளத்தின் மூலமாக மேலும் அதிகமாக ஞானங்களைப் பெற்றுக் கொண்டார் என்பதையும், அதன் விளைவாக கிறித்தவத்தில் கடுமையாக இருந்த அவரது கணவரும், மாப்பிள்ளை வீட்டாரும் எந்த அளவுக்கு எதிரியாகி விட்டனர்; அவர்களின் எதிர்ப்பையும் சம்பாதிக்க வேண்டியது ஏற்பட்டது என்பதையும், **அதன் காரணமாக கணவனை விட்டும் பிரிய நேர்ந்தது என்றும், அவருடைய இரண்டு குழந்தைகளையும் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கேற்ப கணவரிடம் கொடுக்க வேண்டியது ஏற்பட்டது என்பதைப் பற்றியும் அந்தப் பெண்மணி எடுத்துக் கூறினார்.ஆயினும் அவர் உண்மையைத் தேடுவதற்கு முன்னுரிமை தந்தார். இவை அனைத்தையும் விட்டு விட்டார்.**

(கிறித்தவப் பெண்மணியாகிய) அவர் கூறுகிறார்: நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இணைய தளத்தில் சென்று ஆழமாக படித்திருக்கிறேன். மேலும் **MTA** வையும் தொடர்ந்து பார்த்து வருகிறேன். மற்ற முஸ்லிம் பிரிவுகளைப் பற்றியும் எனக்கு விபரம் தெரியும். ஆனால் எனக்கு எங்கேயும் திருப்தி கிடைக்கவில்லை. இஸ்லாத்தின் பக்கம் கவனம் செல்லும்போதெல்லாம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நூல்களைப் படிப்பதன் பக்கம் கவனம் சென்றது. நமது அந்த அஹ்மதி, அந்தப் பெண்மணியிடம் சென்ற நாட்களில் **MTA** ல் எங்கள் மாநாடும் ஒளிபரப்பப்பட்டது எனக் கூறினார். அப்போது அவர், அந்த மாநாட்டையும் நான் பார்த்தேன். இப்போது நான் உண்மை இஸ்லாத்தில் இணைய விரும்புகிறேன் என்றார். அந்த அஹ்மதி எழுதுகிறார்: அந்த நேரத்தில் அந்தப் பெண்மணியுடன் என் மகளும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாள். அவள் கூறினாள்: மாநாட்டில் புதிதாக வருபவர்கள், அஹ்மதிய்யத்தில் புதிதாக பைஅத் செய்பவர்கள், அவர்கள் எவ்வாறு பைஅத் செய்தனர் என்பதற்கான சம்பவங்களைக் கூறுகின்றனர். அப்போது இதில் சில கதைகள் இருக்கின்றன;

மிகைப்படுத்திக் கூறுதல் இருக்கின்றது என்று நான் கருதினேன். ஆனால் இந்தப் பெண்ணின் பேச்சுகளைக் கேட்டு எனது ஈமானும் புதிதாகி விட்டது. இவை மிகைப்படுத்திக் கூறுபவை அல்ல; மாறாக, அல்லாஹ் உலகத்தின் உள்ளங்களை திருப்புகிறான். அல்லாஹ் எவ்வாறு நல்வழிகாட்டுகிறான்? என்பது புரிந்தது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எல்லா சம்பவங்களும் எடுத்துக் கூற நேரமிருக்காது என்பதனால் சம்பவங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஆயினும் அவையும் அங்கு எடுத்துக் கூற முடிவதில்லை. எனவே ஆண்டுக்கிடையிலும் சந்தர்ப்பம் கிடைத்தால் அவற்றை எடுத்துக் கூறிக் கொண்டிருப்பேன் என நான் சென்ற ஆண்டு கூறியிருந்தேன். அவற்றில் சில சம்பவங்கள் கூறப்பட்டன; சில கூற முடியவில்லை. பிறகு இந்த ஆண்டு சம்பவங்கள் அதிகமாக சேர்ந்து விட்டன. ஆக, நான் இதை ஏன் கூறுகிறேன் என்றால், நமது ஈமானில் உறுதி ஏற்பட வேண்டும்; அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு நாம் எந்த அளவுக்கு பயனைப் பெற வேண்டும் என்பதைப் பற்றியும் நாம் ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும். எப்படி இருந்தபோதிலும், இன்று நான், புதிதாக பைஅத் செய்தவர்களுக்கு அல்லாஹ் எவ்வாறு வழிகாட்டி இருக்கிறான் என்பதற்கான சில சம்பவங்களை எடுத்துக் கூறுவேன். **இவற்றை நாம் வெறும் ஆர்வமூட்டும் சம்பவங்களாக மட்டும் புரிந்து கொண்டு கேட்கக் கூடாது; மாறாக, இவை ஈமானை அதிகரிக்கச் செய்வதற்குக் காரணமாக இருக்கின்ற - இருக்க வேண்டிய உண்மைகளாகும். இவை நமது நிலைமைகளை சீர்தூக்கிப் பார்ப்பதற்குக் காரணமானவையாக இருக்க வேண்டும்.** இந்த ஜமாஅத்துடன் அல்லாஹ் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்து நன்றியுணர்வை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். நமது பொறுப்புகளின் பக்கமும், அவற்றை நிறைவேற்றுவதன் பக்கமும் கவன மூட்டக் கூடியதாக இருக்க வேண்டும். உலகம் வரை உண்மையின் தூதை எட்ட வைப்பது இன்று நமது பணியாகும். இந்தப் பணியை நிறைவேற்றுவதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்ற அதே நேரத்தில் அல்லாஹ் கூறியிருக்கின்ற வழிகளில் நமது செயல்களை ஆக்கிக் கொள்ள வேண்டிய தேவையும் இருக்கிறது. அப்போதுதான் நமது செயல் அளவிலான முன்மாதிரிகள் (புதிதாக) இணைபவர்களின் ஈமானை மேலும் அதிகமாக உறுதியாக்கிக் கொண்டே செல்லும். இப்போது சம்பவங்களைக் கூறுகிறேன்:

துனிஸியா **(Tunisia)** விலிருந்து மனியா சாஹிபா என்பவர் எழுதுகின்றார்: எனக்கு படிப்பதில் அதிக ஆர்வம் உண்டு. நான் திருக்குர்ஆனையும், இஸ்லாத்தின் பல்வேறு நூல்களையும் படித்திருக்கிறேன். ஆனால் பல விஷயங்கள் புரியாமல் இருந்தன. உதாரணமாக, சூரா அந் நிஸாவின் ***'வமா கதலூஹூ வமா ஸலபூஹூ வலாக்கின் ஷுப்பிஹ லஹும்'*** - அவர்கள் அவரை கொலை செய்யவுமில்லை: சிலுவையில் அறைந்து கொல்லவுமில்லை; ஆயினும் அ (ந்த நிகழ்ச்சியான)து அவர்களுக்கு சந்தேகத்திற்குரியதாக ஆக்கப்பட்டது என்ற (4:158) வசனம், அவ்வாறே ஈஸா (அலை) அவர்களின் மரணம் பற்றிய மற்ற வசனங்கள் எப்போதும் எனது கவனத்தின் மையப் பகுதியாக இருந்தது. ஈஸா (அலை) அவர்கள் மரணித்து விட்டார்களா? அல்லது உயிருடன் வானத்தில் இருக்கின்றார்களா? பிறகு (ஹதீஸ் தொகுப்பு நூலான) ரியாழுஸ் ஸாலிஹீனில் தஜ்ஜாலின் பண்புகள் பற்றி படித்தேன். அப்படிப்பட்ட ஒருவரை அல்லாஹ் ***கைர உம்மத்திடம்*** (சிறந்த உம்மத்திடம்) எப்படி அனுப்புவான்? இந்த சிந்தனைகளால் நான் குழம்பிப் போயிருந்தேன். அல்லாஹ்விடம் துஆ செய்து கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு நாள் **TV Channel** - ஐ திருப்பிக் கொண்டிருந்தபோது **MTA Channel** கிடைத்து விட்டது. அது மற்றெல்லா மார்க்க நிகழ்ச்சிகளை விட வித்தியாசமானதாக இருந்தது. அதில் ஈஸா (அலை) அவர்களின் மரணம் பற்றி ஒரு பாதிரியுடன் கருத்துப் பறிமாற்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மற்ற **Channel** களுக்கு நேர்மாற்றமாக கலந்து கொண்டவர்களும் நிகழ்ச்சியை நடத்துபவரும் பேசும் விதம் கண்ணியமானதாகவும் இருந்தது. அப்போது ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆக தோன்றி விட்டார்கள் என்பது தெரிந்து விட்டது. பிறகு தொடர்ந்து **MTA** - வைப் பார்த்து வந்தேன். எல்லா பிரச்சனைகளும் படிப்படியாக புரிய வந்தது. பிறகு **நான் அல்லாஹ்விடம், அல்லாஹ்வே! நான் அஹ்மதியாகாத வரை எனக்கு மரணம் வர வேண்டாம் என துஆ செய்து வந்தேன். கடைசியில் நான் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து விட்டேன். இது என் மீது அல்லாஹ்வின் மாபெரும் அருளாகும்.**

பிறகு எமனிலிருந்து ரம்தான் சாஹிப் தாம் பைஅத் செய்த சம்பவத்தைப் பற்றி எழுதுகின்றார்: எனக்கு சீன மக்களுக்கு மத்தியில் இருக்கும் வாய்ப்பு கிடைத்தது. சீனாவில் சென்று அவர்களை நான் நல்ல மக்களாகப் பார்த்தேன். அவர்கள் நல்ல முறையில் நடந்து கொள்வதைப் பார்த்து சில அரபிகள்

அவர்களிடமிருந்து தகாத அளவில் பயன்பெறுவதையும் அவர்களைப் பற்றி தவறாகவும் பேசுவதையும் கண்டேன். இந்த சீன மக்கள் தமது அழகான ஒழுக்கத்திலும், அழகான செயலிலும் இருக்கும்போது இவர்கள் எப்படி நரகத்தில் செல்வார்கள்? மேலும் நாம் வெறும் பெயர் அளவிலான முஸ்லிம்களாக இருப்பதனால் எப்படி சுவர்க்கத்திற்கு வாரிசாக முடியும்? என்ற சிந்தனை எனக்குத் தோன்றியது. இதற்குப் பிறகு நான் ஆய்வு செய்தேன்; இஸ்லாமிய நூல்களைப் படிக்கத் துவங்கினேன். இந்த ஆய்வு தொடர்ந்தது. பல்வேறு இஸ்லாமிய நூல்களையும், சேனல்களையும் பார்த்தேன். இதற்கிடையில் ஒரு நாள் திடீரென **MTA** - வைக் காண நேர்ந்தது. அதில் கூறப்பட்ட சான்றுகள் எந்த அளவுக்கு உறுதி மிக்கவையாக இருந்தனவென்றால் அவற்றின் வல்லமையினால் நான் அதிர்ந்து விட்டேன். உடலில் ஒரு மின்சாரம் பாய்ந்தது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது. அதற்குப் பிறகு தொடர்ந்து **MTA** - வைப் பார்த்து வந்தேன். அதைப் பார்த்தவாறு என்னையுமறியாமல் அழ ஆரம்பித்தேன். ஆனால் ஏன் அழுகிறேன் என்பது தெரியாமல் இருந்தது. இறைவனே என்னை இந்த சேனலின் பக்கம் வழிகாட்டி இருக்கிறான் என்ற உணர்வு மேலோங்கி இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையை அறிவதற்காக அல்லாஹ்விடம் அதிகமாக துஆ செய்ய ஆரம்பித்தேன். ஒவ்வொரு முறையும் இதற்கான விடையாக எனக்கு மன நிறைவு என்ற வகையில் கிடைத்துக் கொண்டிருந்தது. இதிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உண்மையாளர் என்ற திருப்தி கிடைத்தது. இதற்குப் பிறகு **அன்னாரின் நூல்களைப் படிக்க ஆரம்பித்தேன். அவற்றில் எனது பெரும்பாலான கேள்விகளுக்கு விடை இருந்தது. இதற்குப் பிறகு நான் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினராக ஆகி விட்டேன்.**

பிறகு கிர்கிஸ்தான் (**Kyrgyzstan)** லிருந்து சலாமத் சாஹிப் எழுதுகின்றார்: நான் பணிபுரியும் இடத்தில் ஒரு கிறித்தவ பெண்மணி இருக்கின்றார். அவருடன் மார்க்கப் பேச்சு வார்த்தை நடைபெற்றது. பேச்சு வார்த்தைக்கிடையில் அவர், எனக்கு எனது மார்க்கத்தின் மீது மன திருப்தி இல்லை எனக் கூறினார். அவருக்கு இஸ்லாம் அஹ்மதிய்யத்தைப் பற்றி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. மேலும் **இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் கொடுக்கப்பட்டது. (கிறித்தவ பெண்மணியாகிய) அவர் கூறினார்: மார்க்கத்தைப் பற்றி எனக்கு எத்தனை கேள்விகள் இருந்தனவோ அவை அனைத்திற்கும் இந்த நூலில் எனக்கு பதில் கிடைத்து விட்டது.** மேலும் சத்தியமாக இஸ்லாம் உண்மையான மார்க்கமாகும். இதற்குப் பிறகு அவர் மேலும் அதிகமாக ஜமாஅத் நூல்களைப் படிக்க ஆரம்பித்தார். மேலும் இஸ்லாத்தின் மீது அவருக்கிருந்த ஈமான், உறுதிமிக்கதாக மாறிக் கொண்டே சென்றது. எதுவரை என்றால், இந்தப் பெண்மணி காதியான் வரை சென்றார். பைஅத்தும் செய்து விட்டார். தற்போது இவர் வஸிய்யத் அமைப்பிலும் இணைந்துள்ளார்.

சிலருக்கு திருப்தி கிடைப்பதில்லை; ஆனால் உண்மையை அறிந்து கொள்வதற்கான ஆசை இருக்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதாவது, நீங்கள் சொந்த சிந்தனைகளை விட்டும் விலகி நின்றவாறு நல்ல எண்ணத்துடன் இறைவனிடம் துஆ செய்தால் அல்லாஹ் நேர்வழி காட்டுகிறான். பிறகு ஏதாவதொரு வகையில் அல்லது கனவின் மூலமாக நேர்வழி கிடைக்கின்றது. அஹ்மதிய்யத்தின் உண்மை வெளிப்படுகிறது.

## கனவுகளைப் பற்றிய சில சம்பவங்கள்

பிறகு ஜெர்மனியிலிருந்து இப்ராஹீம் காரூன் சாஹிப் எழுதுகின்றார்: ஜமாஅத் பற்றிய அறிமுகம் கிடைத்த பிறகு நான் **MTA** பார்க்க ஆரம்பித்தேன். பிறகு நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மை பற்றி இஸ்திகாரா துஆ செய்ய ஆரம்பித்தேன். ஒரு நாள் இஸ்திகாரா தொழுகைக்குப் பிறகு நான் கனவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பார்த்தேன். அவர்கள் தமது மாளிகையிலிருந்து வெளியே வருகிறார்கள். அந்த மாளிகையின் சுவர்களிலிருந்து ஒளிக்கதிர்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நான் இஹ்ராம் அணிந்தவாறு அன்னாரின் நுழைவாயிலின் அருகில் நிற்கின்றேன். நான் குனிந்தவாறு எனது முழங்கையை எனது முழங்காலில் வைத்தேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது கையை திறந்து எனது தலையில் வைத்தார்கள். அப்போது நான் அவர்களிடம் ***ஸம்அன் வ தாஅதன்*** (கேட்டேன்; கட்டுப்பட்டேன்) எனக் கூறினேன். இதற்குப் பிறகு நான் விழித்தெழுந்தேன். அவர் கூறுகிறார்: இதற்குப் பிறகு எனக்கு மனம் திறந்து விட்டது.

ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: இப்படிப்பட்ட சம்பவங்களைக் கேட்டு பிறப்பு அஹ்மதிகளாக இருக்கின்ற நமது பொறுப்புகளும் அதிகமாகி விடுகின்றன. உங்கள் செயல்களின் நிலைமைகளை சரி செய்யுங்கள். அல்லாஹ்வுடன் தொடர்பு வையுங்கள். நமது சோம்பேறித்தனங்கள் நம்மை இழப்பிற்குரியோராக ஆக்கி விட வேண்டாம். அஹ்மதிய்யத்தின் கூட்டம் எப்போதும் முன்னேறிக் கொண்டே சென்று கொண்டிருக்கும். இது அல்லாஹ்வின் நியதியாகும். எனவே நாமும் இந்த கூட்டத்தின் பங்குதாரராக ஆகிக் கொண்டிருக்க வேண்டும். அதற்காக கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

**‘‘ ஒரு காலம் இருந்தது. அப்போது நம்முடன் ஒன்றிரண்டு பேர் இருந்தனர். வேறு யாரும் இருந்ததில்லை. இப்போது மக்கள் கூட்டம் கூட்டமாக வருவதை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.** ***யஃதூன மின் குல்லி ஃபஜ்ஜின் அமீக்*** (தொலைதூரத்திலிருந்து மக்கள் உம்மிடம் வருவார்கள்) என்ற இறையறிவிப்பும் இருக்கிறது. அது மட்டுமல்ல; இதற்கு மேல் இன்னொரு விஷயமும் இருக்கிறது. மக்கள் (நம்மிடம்) வருவதை விட்டும் தடுக்க வேண்டும் என்பதற்காக எதிரிகள் எவ்வளவோ முயற்சி செய்தார்கள். ஆனால் கடைசியில் (தொலைதுரத்திலிருந்து மக்கள் உம்மிடம் வருவார்கள் என்ற) இந்த வார்த்தை நிறைவேறிக் கொண்டிருக்கிறது. **இப்போது புதிதாக வருபவர் இந்த இறையறிவிப்புக்கு ஓர் அடையாளமாக இருக்கிறார்.’’**

பிறகு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

‘‘ நமது ஜமாஅத்தின் ஈமான் பலவீனமாக இருப்பதை அல்லாஹ் விரும்பவில்லை. அல்லாஹ் நமது ஜமாஅத்தின் ஈமானை அதிகப்படுத்துவதற்காக அடையாளங்களை அனுப்பிக் கொண்டிருக்கிறான். ’’

ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் அருளால் இந்த அடையாளங்கள் வெளிப்படுவது இன்று வரை தொடர்கிறது. ஆனால் சில பேறிழந்தவர்கள் இறையடையாளங்களைக் கண்டும் படிப்பினை பெறுவதில்லை; உண்மையை அடையாளம் கண்டு கொள்வதற்கும் முயற்சி செய்வதில்லை. மாறாக, எதிர்ப்பில் முன்னேறிச் செல்கிறனர். அப்படிப்பட்டவர்கள் ஒருநாள் தமது முடிவைக் காண்பர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

‘‘இறைவன் என்னை நியமித்துள்ளான்; இறைவன் என்னை அனுப்பி இருக்கிறான். (எதிரிகளாகிய) அவர்கள், எவர் தனது வருகையை இறைவனுடைய கட்டளையினால் வந்ததாகக் குறிப்பிடுகிறாரோ, அவர் இறைவனுடைய உதவிகளையும் ஆதரவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளாரா இல்லையா என்பதைப் பார்க் (கத்தான் செய்) கின்றனர். அவர்கள் அடையாளத்திற்கு மேல் அடையாளத்தைப் பார்த்தனர். ஆயினும் பொய்யர் என்றனர். அவர்கள் உதவிக்கு மேல் உதவியைக் கண்டனர்; ஆதரவுக்கு மேல் ஆதரவைக் கண்டனர். ஆயினும் மாய வித்தை என்றனர். **எவர்கள் இறைவனின் வார்த்தையை அவமதிக்கின்றனரோ அவர்களிடம் நான் என்ன நம்பிக்கை வைக்க முடியும்?** இறை வார்த்தைக்கான மரியாதை நம்மிடம் எதிர்பார்ப்பது என்னவெனில், அவனது பெயரைக் கேட்டதுமே சரணடைந்து விட வேண்டும். ஆனால் இவர்கள் தீங்கிழைப்பதில் மேலும் முன்னேறிச் சென்றனர். கடைசியில் முடிவு யார் கையில் இருக்கிறது என்பதை இப்போது இவர்களே கண்டு கொள்வர்.’’

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் இந்த எதிரிகளுக்கும் முடிவை சீக்கிரம் காட்டுவானாக. அஹ்மதிய்யத்தின் கூட்டம் மேலும் முன்னேறிக் கொண்டே செல்லும் - இன்ஷா அல்லாஹ். அதை விரைவாக முன்னேற்றிக் கொண்டே செல்வானாக. நாமும் அதில் பங்கு பெற்றவர்களாக ஆகிக் கொண்டே செல்வோமாக.

**Summarized By: Nazarat Nashr-o-Isha’at**

**Translated By:** ***O.M.Muzzammil Ahmad*** **For TAMIL Desk**

**Published By Nazarat Nashr-O-Isha’at Qadian, 143 516, Punjab**